**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**In the Court of Judicial Magistrate, Gingee.**

**CC.No.122/2020**

| | |
|---|---|
| Deposition of Witness for PW | : 1 |
| Name (திரு/திருமதி) | : கண்ணன் |
| Father's Name/ Husband's Name | : முருகேசன் |
| Village & Taluk | : மானாவரம் |
| Calling | : கூலி |
| Age | : 52 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 27.11.2025**

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை :**

1. கடந்த 08.09.2018 அன்று நான் மாடு வாங்குவதற்காக இரவு சுமார்08.30 மணியளவில் கிருஷ்ணன் என்பவர் அழைத்தன் பேரில் காட்டு சித்தாமூர் கிராமத்திற்கு சென்றிருந்தேன். அங்கு அவர் என்னை மறுநாள் காலை வருமாறும், விலை பேசி மாட்டினை கிரையம் பெற்று தருவதாக கூறினார். எனவே நான் அங்கிருந்து மீண்டும் இரவு சுமார் 09.00 மணியளவில் எனது வீட்டிற்கு வந்து கொண்டிருந்தேன். எங்கள் வீட்டிற்கு வரும் வழியில் எங்கள் கிராமத்தில் முருகன் கோவில் உள்ளது. மேற்படி கோவிலுக்கு சற்று பின்புரம் உள்ள வளைவில் ஒரு நபர் டார்ச் அடித்துகொண்டு வந்து கொண்டிருந்தார். நான் எனது TVS வாகனத்தில் சென்று கொண்டிருந்தேன். அவர் டார்ச் வெளிச்சத்தை என் கண் மீது படுமாறு அடித்தார் எனவே நான் வாகனத்தை நிறுத்திவிட்டேன். அப்போது அங்கு வந்த ஆஜர் எதிரி ஏழுமலை என்பவர் என்னை பார்த்து தெவிடியா பையா இன்னைக்கு மாட்டினியா என்று கூறி அவர் கையில் வைத்திந்த டார்ச் லைட்டின் பின் பக்கத்தால் என்னை கண்ணில் குத்திவிட்டார். ஏன் எதற்கு என்னை அடிக்கிறாய் என்று கேட்டபோது அவர் மீண்டும் என்னை தெவிடியா பையா மாட்டினா என்று திட்டி உன்னை கொலை செய்யாமல் விடாமாட்டேன் என்று கூறி என் தலையில் மீண்டும் அதே டார்ச்சால் அடித்துவிட்டார். அதில் நான் மயங்கி கீழே விழுந்துவிட்டேன். இரு சக்கர வாகனத்தில் என்னுடன் சுந்தரமூர்த்தி என்பவரும் வந்திருந்தார். அவரும் நானும் கீழே விழுந்துவிட்டோம். மேற்படி சுந்தரமூர்த்தி ஏன் என்னை அடிக்கிறிர்கள் என்று எதிரியிடம் கேட்டபோது அவர் அதற்கு இதில் தலையிடாதே என்று கூறினார். கீழே விழுந்த நான் எழ முற்பட்டபோது எதிரி

கையில் வைத்திருந்த கம்பால் என்னை அடித்துக்கொண்டே இருந்தார். நான் வலி தாங்க முடியால் காப்பாற்றுங்கள் என்று கத்தினேன். அருகில் இருந்தவர்கள் வந்துவிட்டனர். அவர்கள் வந்ததும், தெவிடியா பையா நீ தப்பித்துவிட்டார் என்னைக்கு இருந்தாலும் கொலை செய்யாமல் விடமாட்டேன் என கூறிக்கொண்டே கையில் இருந்த கம்பை கீழே போட்டுவிட்டு ஓடிவிட்டார். அங்கிருந்தவர்கள் 108 அவசர ஊர்த்திக்கு போன் செய்து என்னை திருவண்ணாமலை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இது குறித்து நான் நள்ளான் பிள்ளை பெற்றாள் காவல் நிலையத்தில் புகார் அளித்தேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான் அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். **மேற்படி புகார் மனு அ.சா.ஆ.1. ஆக குறியீடு செய்யப்படுகிறது**. காவலர்கள் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

போதிய வாய்ப்பளிக்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படாததால் மேற்படி சாட்சியத்தின் சாட்சியம் முடிக்கப்பட்டது.

**மறு விசாரணை :** இல்லை.

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

Sd/–B.Vidhya,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
செஞ்சி.

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**In the Court of Judicial Magistrate, Gingee.**

**CC.No.122/2020**

| | |
|---|---|
| Deposition of Witness for PW | : 2 |
| Name (திரு/திருமதி) | : ராமகிருஷ்ணன் |
| Father's Name/ Husband's Name | : கனேசன் |
| Village & Taluk | : காட்டு சித்தாமூர் |
| Calling | : விவசாயம் |
| Age | : 38 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 27.11.2025**

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை :**

1. அ.சா.1 கண்ணன் என்பவரை தெரியும். ஆஜர் எதிரி ஏழுமலை என்பவரை தெரியும்.கடந்த 08.09.2018 அன்று நான் வீட்டில் படுத்துக்கொண்டிருந்தேன் அப்போது இரவு சுமார் 09.00 மணியளவில் எங்கள் ஊரில் உள்ள முருகர் கோவிலுக்கு பின் பக்கமாக சத்தம்கேட்டது. எனவே நான் அங்கு சென்று பார்த்தேன். அப்போது அ.சா.1 கத்திக்கொண்டிருந்தார். ஆஜர் எதிரி கையில் கோல் வைத்திருந்தார். அங்கு விசாரித்தபோது எதிரி அ.சா.1 யை கோலால் அடித்ததாக தெரிந்தது. காயமடைந்த அ.சா.1 யை திருவண்ணாமலை அரசு மருத்துவமனைக்கு அவசர ஊர்தி மூலம் அனுப்பி வைத்துவிட்டு வந்தேன். காவலர்கள் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

போதிய வாய்ப்பளிக்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படாததால் மேற்படி சாட்சியத்தின் சாட்சியம் முடிக்கப்பட்டது.,

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறு விசாரணை :** இல்லை

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

Sd/-B.Vidhya,

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

செஞ்சி.